"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,815,40,70,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.2,972,19,72,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (29–6–2017) வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 7–26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

23. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறையின் 10–11–2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்கள் 107 மற்றும் 108–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [இந்திய அரசமைப்புச் சட்டம் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

24. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறையின் 15–11–2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 113–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

25. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறையின் 13–1–2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 6–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

26. 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் (பணி நிபந்தனைகள்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜே1) துறையின் 27–1–2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 8–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

27. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் முப்பத்தொன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

52. மானியக் கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

53. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய திட்டச் சாதனை, 2016–2017. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

54. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் மக்கள் சாசனம், 2017. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

55. மானியக் கோரிக்கை எண் 39 – கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

56. பொதுப் பணித் துறையின் (கட்டடங்கள்) திட்டச் சாதனை, 2016–2017. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

2017 ஜூன் 28]

57. பொதுப் பணித் துறையின் (கட்டடங்கள்) மக்கள் சாசனம், 2017. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

58. மானியக் கோரிக்கை எண் 40 – பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

59. பொதுப் பணித் துறையின் (நீர்வள ஆதாரத் துறை) திட்டச் சாதனை, 2016–2017. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

60. பொதுப் பணித் துறையின் (நீர்வள ஆதாரத் துறை) மக்கள் சாசனம், 2017. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

61. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2017–2018. (தமிழ்)

62. மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2017–2018. (தமிழ்)

63. சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் ஒன்றாவது அறிக்கை. (2016–2018)

64. சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் இரண்டாவது அறிக்கை. (2016–2018)

65. சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் மூன்றாவது அறிக்கை. (2016–2018)

66. சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது அறிக்கை. (2016–2018)

*****